# சித்தர் பாடல்களில் சமுதாயத் தத்துவங்கள்

66

**ப.நிவேதா[1] & முனைவர் த.நாகம்மாள் (SS)[2]**

**[1] முதுகலை இரண்டாமாண்டு தமிழ், [2] உதவிப்பேராசிரியர்,**

**தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,**

**கோயம்புத்தூர் -043**

nivethapalanisamy665@gmail.com, 19764naga@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

சித்தர் பாடல்களில் சமூக நல்லிணக்கம், சமூக ஏற்றத்தாழ்வு, மூடநம்பிக்கை போன்றவை குறித்த கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பிற்காலச் சித்தர்கள் சமூக ஏற்றத்தாழ்வுக்கும் மூடநம்பிக்கைக்கும் எதிராகக் குரல் கொடுத்துள்ளனர். பதினெண் சித்தர் பாடல்களில் சமயம், தத்துவம், அறிவியல் என்பனவற்றுடன் சமூக நல்லிணக்கம் பற்றிய எண்ணக்கருக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. சித்தர் பாடல்களில் மருத்துவச் செய்திகள் ஆகியவற்றை குறிக்கும் வகையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** சித்துகள் - யோகம் - படைப்புச் சக்தி - சமயபேதம்.

**முன்னுரை:**

சித்தர்கள் இறவா நிலையைப் பெற்றவர்கள், அழியாத உடலைப் பெற்றவர்கள். அழியக் கூடிய உடலை அழியாது பாதுகாக்கும் வழிமுறையினைக் கண்டறிந்தவர்கள். கூடுவிட்டுக் கூடுபாயும் பண்டைக் காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் மக்கள் நோயின்றி நீண்டகாலம் உறுதியான உடம்போடு வாழ்வதற்காகச் சித்தவைத்தியக் கலையை வளர்த்தனர் சாதி, மத, இன, மொழி வேற்றுமைகளைக் கடந்து மக்களுக்கு உதவுவது இக்கலையாகும். சித்தர்களின் பெருமைகளைப் பற்றிப் பலர் அறிந்துள்ளனர். சித்தர்கள் பல அற்புதச் செயல்களைச் செய்யக்கூடியவர்கள். தன்மை பெற்றவர்கள் சித்தர்கள் முக்காலமும் பற்றி அறியும் ஞானம் பெற்றவர்கள். பண்டைக்காலத்தில் வாழ்ந்த அறிவாளிகள் என்று அழைக்கப்பட்டவர்கள்.

தமிழ் மொழியில் அனைத்து மக்களுக்கும் பயன்படக்கூடிய இலக்கியக் கலை வைத்தியக் கலையேயாகும். இவ்வைத்தியக் கலைக்குச் சித்தர் வைத்தியம் என்று பெயரிட்டு அழைத்தனர் சித்தர்களால் கண்டறிந்து கையாளப்பட்ட வைத்திய முறையைச் சித்தர் வைத்தியம் என்றனர். பின்னர் அவையே சித்த வைத்தியம் என்று ஆயிற்று. சித்தர்கள் தம் ஞானப் பாடல்களில், மருந்துண்ணாமல் உடம்பினை நோயின்றிப் பேணிப் பாதுகாக்ககூடிய வழிமுறைகளைக் கூறியுள்ளனர். இவர்கள் தம் பாடல்களின் வழி ஒன்றுபட்ட சமுதாயத்தினைக் காண முற்பட்டனர்.

**தமிழ் இலக்கியத்தில் சித்தர் பற்றிய குறிப்புகள்:**

தமிழ் இலக்கியத்தில் சித்தர் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சான்றாக திருவிளையாடற் புராணத்தில், சிவனை எல்லாம் வல்ல சித்தன் என்று கூறுவதை காணலாம். இதனை,

**"நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்**
**தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்**
**கால்உண வாகச் சுடரொடு கொட்கும்**
**அவிர்சடை முனிவர்"**

**(புறம் - 192)**

இங்கு குறிப்பிடப்படும் "முனிவர்" என்னும் சொல் சித்தரைக் குறிக்கும். மேலும் இங்குச் சுட்டப்படும் முனிவருக்குரிய ஒழுக்கங்கள் பட்டினப் பாலையிலும், திருமுருகாற்றுப்படையிலும் கூறப்பட்டு உள்ளதனைக் காணலாம்.

இராமலிங்க வள்ளலார் தமது அருட்பாவில் இறைவனைக் குறிக்கச் சித்த சிகாமணியே என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

**(சைவ. சித் - ப. 89)**

**பதினெண் சித்தர்கள்:**

**"சித்தர்கள் பதினெண்மர்"** என்று கூறும் வழக்கம்பன்னெடும் காலமாக இருந்து வருகின்றது. இதனை அவர்தம் பாடல்களின் வாயிலாக அறிய முடிகின்றது.

**"மூலரோடு பதினெண்பேர் பரநாதாக்கள்**
**முத்திபெற்ற சப்தரிசி தெட்சணாமம்"**

**(சி.பா - 1899)**

**"வானென்ற ஒருவனெட்டில் சிக்காதப்பா**
**மைந்தனே பதினெண்பேர் எட்டும்பாரே"**

**(சி.பா - 1982)**

இப்பதினெண் சித்தர்கள் போன்று வடக்கில் நவநாதச் சித்தர்கள் என்று குறிக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளது. சித்தர்களுக்கு கைவந்த கலைகளில் ஒன்றாக கருதப்படுவது சித்து விளையாட்டு ஆகும். **"சித்துகளைக் கைவரப் பெற்றவர் சித்தர்கள்"** என்று கூறும் வழக்கம் இன்றும் காணப்படுகின்றது.

**மக்களினம் ஒன்றே:**

பண்டைக் காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் பதினெண்மர் என்பர். இவர்களில் தலைசிறந்தவர், முதன்மையானவர் திருமூலர் என்பவராவார். இவர் தம் பாடல்வழி சாதி, சமய, இன, மொழிப்

பேதமற்ற சமுதாயத்தினைக் காண முற்பட்டவர். இதனை,

**"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின் நமனில்லை நாணாமே**
**சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து**
**நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே".**

**(திரு . ம - 2066)**

என்று எடுத்து இயம்புகின்றார்.

மதத்தின் பெயராலும், இறைவனின் பெயராலும் மக்களிடம் பிரிவினைகளை ஏற்படுத்துவோரை இப்பாடல் சாடுகின்றது. திருமூலர் வாழ்ந்த காலத்தில் சாதி, மத, இன, தெய்வம் இவற்றால் பூசல்கள் ஏற்பட்டுச் சமுதாயம் சீரழிந்து காணப்பட்டிருக்க வேண்டும். அதனை நீக்கவே இப்பாடலைப் பாடியிருக்கலாம். **"எல்லாம் ஒன்றே"** என மனதில் உறுதி கொண்டால் சமுதாயத்தில் சண்டைகள் பூசல்கள் இவைகள் காணாமல் போய்விடும்.

பண்டைக்காலம் முதல் இக்காலம் வரை மக்களை ஒன்று சேரவிடாமல் பிரித்து வைப்பது சாதி, சமய, பேதங்களாகும். இவை சமுதாயத்தை விட்டு அடியோடு விலக வேண்டும் என பகுத்தறிவு வாதம் பேசும் சித்தர்கள் அனைவரும் எண்ணினர்.

**"சமயபேதம், பலவான சாதி பேதங்கள்**
**சமயந் தோர்க்கே யல்லாது சற்சாது களுக்கோ? "**

**(சிவ . பா - 46)**

எனக் கேட்கின்றனர்.

உண்மை நெறிகளை உணர்ந்த ஞானிகளுக்குச் சமய, சாதிப் பாகுபாடுகள் ஏற்படுவதில்லை. அவர்கள் இப்பாகுபாடுகளை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இப்பேதங்களை விட்டவர்களே சிறந்த மனிதத் தன்மை படைத்தவர்கள் என்று மேற்கண்ட பாம்பாட்டிச் சித்தர் பாடல் எடுத்துறைக்கின்றது.

**விருந்தோம்பலின் சிறப்பு:**

பண்டையகாலம் முதல் இக்காலம் வரை விருந்தோம்பலில் சிறப்படைந்து காணப்படுபவர்கள் நம் தமிழர்கள். இத்தகைய விருந்தோம்பல் பற்றியும் சித்தர்கள் கூறியுள்ளனர். உண்ணும் போது பிறர்க்கு இயன்றளவு கொடுத்து உண்ணுவதே சிறப்புடையது என இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதனை திருவள்ளுவர்,

**"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு"**

**(குறள் - 86)**

என்று கூறுகின்றார் வள்ளுவர். இக்கருத்தினை அடியொட்டியே திருமூலர்.

**"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மீன்**
**பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே!..."**

**(திரு.ம.1 - 250)**

என்று தம்பாடல் வரிகளின் மூலமாக எடுத்துக் கூறுகின்றார்.

காகங்கள் தாங்கள் உணவு உண்ணும் பொழுது தம் கூட்டத்தினை அழைத்து உண்பதுபோல நாமும் உண்ணும் பொழுது பசியோடு இருக்கின்றவர்களுக்கு நம்மால் இயன்றவற்றைக் கொடுத்து உண்பதே சாலச் சிறந்ததாகும். என்பதை மேற்கண்ட பாடல் உணர்த்துகின்றது. **"சேர்ந்துண்ண வாரும் செகத்தீரே"** என்று தாயுமானவர் அழைத்ததும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஒருவேளைச் சோற்றுக்குக்கூட வழியின்றிக் கையேந்தும் ஒருவனுக்குச் சாதி, குளம், இனம், மொழி என்பனவற்றைப் பாராது உணவு கொடுக்க வேண்டும் என்கின்றார் திருமூலர்.

**பெண்ணின் பெருமை:**

மனித இனம் தோன்றுவதற்கும், தலைப்பதற்கும் பெண்களே காரணம் எனச் சித்தர்கள் நினைத்தனர் ஒருவர் நீண்டகாலம் நலமுடன் வாழப் பெண்களின் உறவை வெறுக்க வேண்டும் என்றனர். இருப்பினும் பெண்களை அவர்கள் முற்றிலுமாக ஒதுக்கவில்லை.

பெண்களை சக்தி என அவர்கள் கூறுகின்றனர். பெண்கள் தான் படைப்புச் சக்திபெண்கள் இல்லையென்றால் ஆணும் இல்லை, உலக படைப்புகளும் இல்லை எனச் சித்தர்கள் எண்ணினார்கள்.

இதனை,

**"மண்ணும்இல் லாமலே விண்ணும் இல்லை, கொஞ்சம்**
**வாசம் இல் லாமலே பூவும் இல்லை**
**பெண்ணும் இல்லாமலே ஆணும் இல்லை'அது**
**பேணிப் பாரடி வாலைப் பெண்ணே!.."**

**(போ.சி - 72)**

என்று கொங்கண சித்தர் பாடல் கூறுகின்றது. ஆகவே உலகம் என்பது பெண்ணைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது. பெண்கள் இல்லையென்றால் அகிலமே இல்லையென்று கூறலாம் என்பது சித்தர்களின் கொள்கைகள் கோட்பாடுகள்.

பெண்களின் உறவினை வெறுத்த சித்தர்கள் பெண்களை வெறுக்கவில்லை, மாறாகப்

போற்றியுள்ளனர். பெண்களைப் பெருமைப்படுத்தியுள்ளனர்.

**உள்ளம் பெருங்கோவில்:**

சித்தர்களின் வாழ்க்கை தனி வாழ்க்கையாகும். அவர்கள் ஆடம்பரத்தினை விரும்பாதவர்கள். மக்கள் வாழ்வைச் செம்மைப் படுத்த விரும்பியவர்கள். சமுதாயத்தில் நிலவும் மூட நம்பிக்கைகளை நீக்க முற்பட்டவர்கள். எல்லா மனிதர்களையும் உயர்ந்த அறிவுள்ளவர்களாக மாற்ற எண்ணியவர்கள்.

ஆடம்பரமான பெரிய பெரிய கோவில்களைக் கட்டுவது’அதற்குள் கடவுள் அடங்கியுள்ளான் என்று கூறுவது’கடவுளுக்கு உருவம் வைத்து’ வணங்குவதுஅவற்றிற்குத் திருவிழாக்கள் நடத்துவது’மந்திரங்களைக் கூறுவது போன்றவற்றால் பயன் ஏதுவும் இல்லை என்பது சித்தர்களின் கருத்து.

**"கோவில்பள்ளி ஏதடா’குறித்து நின்றது ஏதடா?**
**வாயினால் தொழுதுநின்ற மந்திரங்கள் ஏதடா?**
**ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்**
**காயமான பள்ளியில் காணலாம் இறையையே!.."**

**(சிவ.பா - 185)**

என்கிறார் சிவவாக்கியார்.

**மக்கள் கடமை:**

நோயற்றுத் துன்பமில்லா வாழ்வைப் பெற்றவர் இவ்வுலகில் பலருக்கு உதவ வேண்டும். துன்பம் அடைகின்ற மக்களுக்கு உதவி செய்திட வேண்டும். ஏழை, எளிய மக்களிடத்து இரக்கம் காட்ட வேண்டும். அவர்களுக்குத் துன்பம் இல்லாது வாழ வேண்டும். தன் நலத்தினை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்வது மனிதத் தன்மையாகாது இது போன்ற அறிவுரைகளை,

**"ஏழை அனாதிகள் இல்லை என்றால், அவர்க்கு**
**இருந்தால் அன்னம் கொடுக்க வேண்டும்.**
**நாளை என்று சொல்லல் ஆகாதே’என்று**
**நான்மறை வேதம் முழங்குதடி!.."**

**(கொ.சி - 86)**

என்று வாலைகும்மி பாடுகின்றது.

**யோகத்தால் நோய் நீங்குதல்:**

யோகப் பயிற்சியினால் இவ்வுலக வாழ்க்கை யில் இன்பத்தைப் பெறலாம் என்பது சித்தர்களின் நம்பிக்கை. இவ்வுலகில் உடல் நோயின்றி நீண்டகாலம் வாழ்வதற்கு யோகப் பயிற்சி

இன்றியமையாதது என்று சித்தர்கள் தத்தம் பாடல்களில் கூறியுள்ளனர்.

**"ஆயுள் கொடுப்பாள் நீரிழிவு முதல்**
**கண்டன மற்ற வியாதிகள் எல்லாம்**
**பிசாசு, பறந்திடும் பில்லிபோல், அடி**
**பத்தினி வாலைப்பெண் பேரைச் சொன்னால்"**

**(கொ.சி - 105)**

என்ற பாட்டினால் நீரிழிவு வியாதி உள்பட்ட கொடிய நோய்கள் அனைத்தும் யோகப் பயிற்சி செய்வதினால் பறந்துபோய்விடும் என அறிய முடிகின்றது.

நீரிழிவு நோய்க்கு யோகப் பயிற்சி சிறந்த மருந்து என்பது இன்றைய மருத்துவர்கள் கண்ட மருந்து என்றாலும், ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே சித்தர்கள் இதனை ஆராய்ந்து கண்டறிந்து உள்ளனர் என்பது வியப்பான செய்தியே ஆகும்.

**முடிவுரை:**

சித்தர்கள், மக்கள் அனைவரும் ஒழுக்கம் தவறாது வாழ வேண்டும் என்றும், பொய், சூது, கொலை, குடி போன்ற செயல்களில் ஈடுபடக் கூடாது என்றும்,கூடா ஒழுக்கத்தினால் கேடு ஏற்படும் என்றும், தம் பாடல்களில் கூறியுள்ளனர். ஒழுக்கத்தின் மேன்மையை உணர்ந்தவர்களே யோகப் பயிற்சியில் சிறந்து விளங்க முடியும் என்றும் கூறியுள்ளனர். அப்பொழுது நீண்டகாலம் உயிர் வாழலாம் என்பதையும் நினைவு கூர்ந்துள்ளனர். மேலும் சாதி, மத, சமய, இன மொழிகளற்ற சமத்துவ சமுதாயத்தைக் காண முற்பட்டவர்கள் சித்தர்கள்.

இன்றைய மருத்துவ ஆராய்ச்சி மாணவர்கள் கற்கும் இன்றைய கல்விமுறை 3000 ஆண்டுகளுக்கு முன்னரே சித்தர்களால் போதிக்கப்பட்டதாகும்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்ற கனியன் பூங்குன்றனாரின் பாடல் வரிகளுக்கு ஏற்ப. மனித சமுதாயத்தினை நேசிக்கும்படி சித்தர்களின் பாடல்கள் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. எனவே சித்தர் இலக்கியங்களின் பயனை அனைவரும் பெறும் வகையில் கருத்தினைப் பகிர்ந்து சமுதாயத்தில் அனைவரும் பயன்பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என்பதே சித்தர்களின் நோக்கமாக அமைகின்றது.

**துணைநூற்பட்டியல்:**


- முனைவர் அ.அறிவொளி - சித்தர் பாடல்கள், வர்த்தமானன் பதிப்பகம், 12 தியாகராய நகர் சென்னை-600 017
- திரு.ப.இராமநாதபிள்ளை (எழுதியவிளக்கம்) திரு.அ.சிதம்பரனார் (எழுதிய குறிப்பு) திருமந்திரம் மூவாயிரம் திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட் ஆழ்வார்பேட்டை சென்னை-18

- மனோஸ் - சித்தர் பாடல்கள், பூங்கொடி பதிப்பகம், 14 சித்திரைக்குளம் மேற்கு வீதி மயிலாப்பூர், சென்னை- 600 004
- பு.வரதராஜன் - திருமந்திர மாலை, பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை 25 பீட்டர்ஸ் சாலை, சென்னை- 600 014
- சாமி.சிதம்பரனார - சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம் தாமரை பப்ளிகேசன்ஸ் (பி)லிட் 41(பி) சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அம்பத்தூர், சென்னை- 600 098
- பேராசிரியர்வ. ஜெயதேவன். முனைவர் சிராஜ் உன்னிஸா நாசர் - தமிழியலின் எதிர்காலவியல், கலைஞர் பதிப்பகம், 19,கண்ணதாசன் சாலை தியாகராய நகர், சென்னை- 600 017
- சா.மாடசாமி - பாம்பாட்டி சித்தர் பாடல்கள், வாசல் பதிப்பகம் மதுரை.